# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 24வது கூட்டம் 16-01-2011 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 6.15 மணிக்கு பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகளாரின் ஆரம்ப செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது அன்றைய தினம் திருமதி. யேசுமலர் தைரியநாதன் அவர்கள் சமூகம் தரவில்லை. கடந்த மாத கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது சில திருத்தங்களின் பின்னர் கூட்ட அறிக்கை திரு.யூலியன் அவர்கள் முன்மொழிந்தார் திரு தேவா அவர்கள் வழி மொழிந்தார்.

மேலும் தை மாதம் 30ம் திகதி பொதுக்கூட்டம் இடம் பெறும் எனவும் அன்றைய கூட்டத்தில் அவர்கள் அறிமுக விளக்கமும் உதவுங்கரங்கள் பணம் விடயமும் ஆலய துப்பரவு சம்பந்தமானவர்களின் விடயமும் இடம் பெறும் என்றும் அத்தோடு அன்றைய தினம் ஆண்டு நிதியின் செலவு விபரம் ஒன்றினை மாகியிடம் பெறப்பட்டு மக்களுக்கு தெரியப்படுத்தல் அவசியம் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

மேலும் புனித செபஸ்தியாரின் பெருநாள் திருப்பலி நிகழ்வுகள் கடந்த முறைபோன்று இடம் பெறும் என்றும் தந்தை கூறினார். அத்தோடு மறைத்தள மறைக்கல்வி மாணவர்களுக்கு இடைவேளை வழங்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஒன்றினை செய்வதாகவும், இதனை எவ்வாறு கொடுக்கலாம் எனவும், அதே சமயம் கன்ரீன் நிலை பாதிக்கும் எனவே அவர்களுடனும் கலந்தாலோசித்து உணவைப் பற்றி பெற்றோர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்ட பின் நடைமுறைப் படுத்தலாம் எனவும் கலந்துரையாடப்பட்டது.

எமது மறைத்தளத்தின் இளைஞர் குழுவைப் போன்று யுவதிகள் குழு ஒன்றினையும் ஏற்படுத்த வேண்டும் எனவும், அத்தோடு எமது மறைத்தள இணையதளத்தின் மூலம் செய்தித் தாள் (news paper) ஒன்றினையும் செய்யலாம் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன இறுதியாக செல்வன் சாள்ஸ் அவர்களின் இறுதி செபத்துடன் கூட்டம் இன்தே நிறைவு பெற்றது.

| | |
|---|---|
| அருட்.தந்தை அன்றூா தவராஜசிங்கம் | திரு.நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 16-01-2011**